Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.107/2011

Deposition of witness for: PW - 8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மாரீஸ்வரி | Father/Husband Name | : | முத்தையா |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |
| Date | : | 02.07.2026 | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02nd day of 07.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரி ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது தமிழக காவல்துறையில் பணியாற்றி 2019–ம் வருடம் ஓய்வு பெற்று மதுரையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 30.12.2009–ம் தேதி காலை 11.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது கீழவளவு காவல்நிலைய குற்ற எண்.152/2009, இ.த.ச பிரிவு 379 வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியாக அறியப்பட்டவரை மேலூர் இடையகோவில்பட்டியை சேர்ந்த பரமேஸ் என்பவரை சாட்சிகள் ராஜ்மோகன், ஹரிகிருஷ்ணன் ஆகியோர்கள் மேலூர் நகை கடையில் அவர்களிடமிருந்து திருடப்பட்ட நகையை விற்க வந்தபோது கண்டறிந்த பிடித்த எதிரி ராணியை பிடித்து வந்து காவல்நிலையத்தில் ஒப்படைத்தனர். உடனடியாக அப்போது பணியில் இருந்த காவல் ஆய்வாளர் திரு.பாலாஜி அவர்களிடம் தகவல் சொன்னேன். காலை 11.30 மணிக்கு காவல் ஆய்வாளர் நிலையம் வந்து அவர் எதிரி ராணியை தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டார். மேற்படி எதிரி ராணியை காவல் ஆய்வாளர்

காவல்நிலையம் முன்பு வைத்து சாட்சிகள் ராஜ்குமார், ஹரிகிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் கைது செய்து அவரை விசாரித்து அவர் திருட்டை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். எதிரியிடமிருந்து நகையை காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள நகை தான் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட நகை ஆகும். (அந்த புகைப்படம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர்**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) என்னை காவல் ஆய்வாளர் எப்போது விசாரித்தார்கள் என்றால் 30.12.2009–ம் தேதி விசாரித்தார். எதிரியை பிடித்து வந்த அன்றைய தினமே என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார் என்றால் சரிதான். எதிரியை சாட்சிகள் ராஜ்குமார், ஹரிகிருஷ்ணன் ஆகியோர்கள் அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். எதிரியை எங்கு இருந்து, எவ்வாறு அழைத்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் ஞாபகம் இல்லை. எத்தனை மணிக்கு எதிரியை சாட்சிகள் அழைத்து வந்தார்கள் என்றால் பகல் 11.00 மணிக்கு. அன்றைய தினம் எங்கள் காவல்நிலையத்தில் மேலூர் காவல்நிலைய காவல் ஆய்வாளர் தான் பொறுப்பில் இருந்தார் என்றால் சரிதான். எதிரியை அழைத்து வந்தபோது யார் நகையை என்னிடம் ஒப்படைத்தார் என்றால் சாட்சிகள் வைத்திருந்தார்கள், அதை ஆய்வாளரிடம் தான் அவர்கள் ஒப்படைத்தார்கள். சாட்சிகள் அந்த நகையை யாரிடம் கைப்பற்றினார்கள், யாரிடமிருந்து வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எதிரி நகையை விற்க வந்தபோது சாட்சிகள் அதை பார்த்து அழைத்து வந்தார்கள். நகையை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான்

எதிரியை விசாரித்தேனா என்றால் இல்லை. எதிரியை காவல் ஆய்வாளர் கைது செய்தார் என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் காவல் ஆய்வாளர் தான் பெற்றார் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் எப்போது யார் முன்னிலையில் காவல் ஆய்வாளர் வாங்கினார் என்று எனக்கு தெரியாது என்றால் சாட்சிகள் ஹரிகிருஷ்ணன் மற்றும் ராஜ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் கீழவளவு காவல்நிலையத்தில் முன்னால் வைத்து காவல் ஆய்வாளர் 11.30 மணிக்கு வாங்கினார்.

2) ராஜ்குமார் புகார்தாரர் பரமேஸ்வரியின் மகன் என்றால் சரிதான். சாட்சி ஹரிகிருஷ்ணன் ராஜ்குமாரின் மைத்துனர் என்றால் சரிதான். புகார் கொடுக்கப்பட்டு எத்தனை நாட்கள் கழித்து எதிரியை சாட்சிகள் அழைத்து வந்தார்கள் என்றால் 09.07.2009-ம் தேதி புகார் கொடுக்கப்பட்டது, 30.12.2009-ம் தேதி எதிரி அழைத்து வரப்பட்டார். நான் சொன்னது போல், சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் சாட்சிகள் எதிரியை காவல்நிலையத்திற்கு அழைத்துவரவில்லை, சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் காவல் ஆய்வாளர் எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை, எனது மேலதிகாரி கேண்டுகொண்டதனால் காவல்நிலையத்திற்கு வராத எதிரியை வந்ததாக சொல்லி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.